***கவனிக்க.-*** *2009.10.15 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1677 - 2010 ඔක්තෝබර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.10.21**

*1677 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1599 |


***கவனிக்க.-*** *இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் 2010 ஆம் ஆண்டிற்கான பலப்பிட்டி நீதிமன்ற வலயத்தின் யூரிமார் மற்றும் விசேட யூரிமார் (சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் மட்டும் கடமையாற்றும்) பட்டியலொன்று பிரசுரிக்கப்படுகின்றது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வெளிவிவகார அமைச்சு

### இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2010

இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு (இதன் பின்னர் ''சேவை'' எனக் குறிப்பிடப்படும்) தகைமையுள்ளோரை சேர்த்துக் கொள்வதற்கான பரீட்சையொன்று சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும்.

***பரீட்சைத் திட்டமும் திகதியும்.***- பரீட்சை இரண்டு பகுதிகளாக நடாத்தப்படும்.

**பகுதி I எழுத்துமூலப் பரீட்சை.**- இது பின்வரும் பாடங்களைக் கொண்ட எழுத்துமூலப் பரீட்சை ஆவதுடன் இப்பரீட்சை 2011, பெப்புருவரியில் கொழும்பில் நடைபெறும்.

(i) பொது வினாத்தாள் ;
(ii) உலக விவகாரங்கள் I (அரசியல்) ;
(iii) உலக விவகாரங்கள் II (பொருளாதாரம்) ;
(iv) கட்டுரை ;
(v) சுருக்கி எழுதுதல் ;
(vi) நுண்ணறிவும் பொது அறிவும் (பல்தேர்வு வினாக்கள்).

***பகுதி II*** – நேர்முகத் தேர்வு.- விண்ணப்பதாரர் எழுத்துமூலப் பரீட்சையில் ஆறு வினாத்தாள்களுக்கும் தோற்றி ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்குக் குறையாத மொத்தப் புள்ளிகளாக 330 புள்ளிகளுக்குக் குறையாத வெளிவிவகார அலுவல்கள் அமைச்சு செயலாளரினால் தீர்மானிக்கப்படும். வெட்டுப்புள்ளி அளவுக்கு அல்லது அதற்கு கூடுதலான புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் மாத்திரம் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். எவ்வாறாயினும் அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் தொகை நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் ஐந்து மடங்கிற்கு மேற்படுதலாகாது. நேர்முகத் தேர்வுக்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். எச்சந்தர்ப்பத்திலும் ஆகக்குறைந்த வெட்டுப்புள்ளிகள் குறைக்கப்படுதலாகாது.

3. **சேவைக்கமர்த்தும் நியதிகள்.**- (அ) இப்பரீட்சையின் பெறுபேறுகள் மூலம் தெரிவாகும் பரீட்சார்த்திகள் அரசாங்க சேவையின் நியமனங்களுக்கான பொதுவான நிபந்தனைகள் மற்றும் 2001 ஆம் ஆண்டின் இலங்கை வெளிநாட்டுச் சேவையின் பிரமாணக் குறிப்புகள் அல்லது அதன் பின் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அல்லது மேற்கொள்ளப்போகும் திருத்தங்களுக்கு அமைய இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு நியமனம் பெறுவர்.

(ஆ) பதவி நிரந்தரமானதும் ; ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

4. ***சம்பள அளவுத்திட்டம்*** :

* இச்சேவைக்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இன் எஸ்எல்-1-2006 சம்பள அளவுத்திட்டத்திற்கு ஏற்புடையதாகும். இச்சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :

ரூபா 22,935-10X645-8X790-17X1,050-ரூபா 53,555 (மாதாந்தம்)

* வெளிநாட்டுச் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பின்வரும் மாதாந்த சம்பள நிலையை அடையமுன் மூன்று வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை களில் சித்திபெறல் வேண்டும் :

முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை.- ரூ. 24,870 என்ற சம்பள நிலையை எய்துமுன்னர் ;
இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை.- ரூ. 27,450 என்ற சம்பள நிலையை எய்துமுன்னர் ;
மூன்றாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை.- ரூ. 31,965 என்ற சம்பள நிலையை எய்துமுன்னர்

* பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை 20/2001 பிரகாரம் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை மூன்று (03) வருடத்தினுள்ளும் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை ஆறு (06) வருடத்தினுள்ளும் சித்திபெறல் வேண்டும்.

* பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை 07/2007 பிரகாரம் அரசாங்க சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோ கத்தர்கள் அரச மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச மொழிகளில் சேவைக்கு சேர்ந்து 5 வருடங்களுக்குள் தேர்ச்சிபெறல் வேண்டும்.

5. **ஆரோக்கியமும் நல்லொழுக்கமும்.**- விண்ணப்பதாரர் தான் திடமான ஆரோக்கியத்துடனும் நல்லொழுக்கம் உடையவராக உள்ளார் என்பதனை வெளிவிவகார அமைச்சு செயலாளருக்குத் திருப்திப் படுத்தல் வேண்டும். அவர் உலகின் எப்பகுதியிலும் சேவையாற்று வதற்குரிய உடல்நிலை உள்ளவராக இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படுவோர் விசேட மருத்துவ பரிசோதனை ஒன்றிற்கு உட்படுத்தப்படுவர்.

6. **தகைமை.**- விண்ணப்பதாரர்-

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) (i) இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும். அல்லது

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழக மொன்றில் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஆவண அத்தாட் சியை சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதை உடையவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் ஏற்கனவே அரச சேவையில் உள்ளாரெனில் அவர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 40 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவரது சேவைக்காலம் திருப்திகரமான பதிவுகளைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்புகள்**.- (i) மேலே கூறப்பட்ட சரத்து 6(இ) இன் பிரகாரம், ஏற்கனவே அரச சேவையில் உள்ளாரென்பது (தாபனக்கோவையின் அத்தியாயம் 1 இல் குறிப்பிடப்பட்டபடி), விண்ணப்ப முடிவுத் திகதியன்று மத்திய மற்றும் மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தனது சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவர் என்பதாகும்.

(ii) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முதல் முன்னுள்ள ஐந்து வருட அரச சேவைக் காலப்பகுதியில் திருப்திகரமான சேவைப் பதிவுகளை அற்றவர் அல்லது ஐந்து வருட சேவைக்கு குறைந்த காலத்தை உடையவராயின் அவர் தனது முழு அரச சேவைக் காலத்திலும் திருப்திகரமான சேவைப் பதிவை அற்றவராயின் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராவார்.

(iii) அரச சேவையில் உள்ள ஒருவர் திருப்திகரமான சேவையை உடையவர் என்பது அவர் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முதல் முன்னுள்ள ஐந்து வருடக் காலப்பகுதிக்குரிய தனது சம்பள உயர்ச்சியை உரிய காலங்களில் தவறாது பெற்றுள்ளார் என்பதும் அல்லது ஒருவர் தான் சேவையாற்றிய தாபனங்களில் ஐந்து வருட சேவைக் காலத்திற்குக் குறைவாயின் அம்முழுக் காலத்திற்கும் உரிய சம்பள உயர்ச்சியை பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அக்காலப்பகுதியில் குற்றங்கள் தண்டனை எதுவும் (எச்சரிக்கை தவிர) பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(iv) ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பங்களை தங்கள் திணைக்கள/தாபனத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- ரூபா 1,000 ஆகும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக அண்மையிலுள்ள மாவட்ட செயலகத்தில், பிரதேச செயலகத்தில் அல்லது கொழும்பிலுள்ள திறைசேரியின் வருமானத் தலைப்பு 2003-02-13 என்ற கணக்கிற்கு செலுத்தப்படல் வேண்டும். இக்கொடுப்பனவிற்காக பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். இதன் பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனப்படலாம்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரர் ஏதாவது காரணங்களின் நிமித்தம் பரீட்சையிலிருந்து வாபஸ் பெற்றாலோ அல்லது பரீட்சைக்குத் தோற்றி ஆனால் தகுதியற்றவர் எனக் காணுமிடத்து அவரது பரீட்சைக் கட்டணத்தை முழுமையாகவோ அதற்கு பகுதியாகவோ மீளப்பெற முடியாது.

8. **விண்ணப்பிக்கும் முறைமை**.- (அ) விண்ணப்பப்படிவத்தை இவ்வறிவித்தலின் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப, விண்ணப்ப தாரர்கள் தாங்களே 8.5 அங்குலம் x 11.6 அங்குலம் (A4) அளவிலான கடதாசியின் இரு பக்கங்களிலும் தயாரிக்க வேண்டும். இல. 1-7 வரையிலான பந்திகள் விண்ணப்பத்தின் முன்பக்கத்திலும் ஏனையவை 2 ஆம் மற்றும் 3 ஆம் பக்கங்களில் வரக்கூடியதாக தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் விண்ணப்பதாரரின் சொந்தக் கையொழுத்தால் நிரப்பப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தயாரிக்கப் படாத மற்றும் உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனப்படலாம். விண்ணப்பப்பம் மாதிரிப்படிவத்தில் காட்டியுள்ளமை போன்று அனுப்பப்படல் வேண்டும். இன்றேல் அவை நிராகரிக்கப்படும். விண்ணப்பம் தயாரிக்கும்போது சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலான விண்ணப்பங்களின் தலையங்கம் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம், ''பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம் (ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு), பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு 2010, நவெம்பர் 22 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தைக் கொண்டிருக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான பகிரங்க போட்டிப் பரீட்சை - 2010'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் இடதுபக்க மேல் மூலையில் (2x2 செ. மீ.) ஒரு கூண்டு தயாரிக்கப்பட்டு அதனுள் ஆங்கில எழுத்து 'S' எழுதப்பட வேண்டும். இம்முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) முற்றிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப் படுவதற்கு இடமுண்டு. தபாலில் காணாமற்போன அல்லது தாமதமான விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற்கு எழுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றது குறித்து அறிவிக்கப்பட மாட்டாது. அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அதுபற்றிய அறிவித்தல் ஒன்று பத்திரிகைகளில் வெளியிடப்படும். பத்திரிகை அறிவித்தல் பற்றி விழிப்பாக இருக்குமாறு விண்ணப்பதாரர்கள் கேட்கப்படுகின்றனர்.

(ஊ) பத்திரிகை விளம்பரத்தின் பின் 2 அல்லது 3 நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து விளம்பரத்தில் குறிப்பிட்டவாறு உடனடியாகப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். இவ்வாறு அறிவிக்கும்போது அனுப்பிய விண்ணப்பப்பத்திரம், காசு கட்டிய பதிவுத்தபால் பற்றுச்சீட்டு ஆகியவற்றின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிகளுடன் கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் அனுமதி அட்டை அனுப்பக்கூடிய தொலைநகல் இலக்கத்தையும் பரீட்சைத் திணைக்களத்திற்குச அறிவித்தல் சாலச்சிறந்தது.

9. **பரீட்சைக்கு அனுமதித்தல்**.- (அ) பரீட்சைக்குத் தோற்ற தகுதி பெற்ற விண்ணப்பதாரருக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்கு சமுகமளிக்கும் விண்ணப்பதாரர் தனது அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட மாட்டார். விண்ணப்பதாரர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் பரீட்சைகள் சம்பந்தமான விதிகள் மற்றும் ஒழுங்குகளுக்கு கட்டுப்பட கடப்பாடு உடையவராவார்.

இவ்விதிகளை மீறுமிடத்து பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்குள்ளாவார்.

(ஆ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு சமுகமளிக்கும் முதல் நாளன்று அப்பரீட்சை மண்டபத்திற்கான அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சை எழுத வேண்டும். பரீட்சார்த்திகளால் பின்பற்ற வேண்டிய ஒழுங்குவிதிக் கோவையொன்று இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளையும் கொண்டவர் என்னும் கருத்தை பிரதிபலிக்காது.

10. **பரீட்சார்த்தியின் அடையாளத்தை நிரூபித்தல்**.- ஒரு பரீட்சார்த்தி தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் தனது ஆளடையாளத்தை பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும்

வகையில் நிரூபிக்க வேண்டப்படுவர். இதற்கான பின்வரும் ஏதேனும் ஒரு சான்றுப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(1) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

*11.* **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை.**- பரீட்சார்த்தி ஒருவர் எச்சந்தர்ப்பத்திலாவது, பரீட்சைக்கு முன்போ, பரீட்சை நடக்கும்பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ தகுதியற்றவர் எனக் காணப்படுமிடத்து அவரது விண்ணப்பம் இரத்துச்செய்யப்பட இடமுண்டு. பரீட்சார்த்தி கொடுத்துள்ள தகவல்கள் ஏதாவது அவர் அறிந்தவரை உண்மை அற்றதெனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே உண்மைத் தகவல்களை மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் இடமுண்டு.

*12.* **பரீட்சை மொழி** :

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். எனினும் பரீட்சார்த்தி தான் தேர்ந்தெடுத்த ஒரு மொழியிலேயே பரீட்சையின் எல்லாப் பாடங்களையும் எழுத வேண்டும். தேர்ந்தெடுக்கப் பட்ட மொழி பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றப்பட முடியாது என்பதை கவனத்திற்கொள்ளவும்.

*13.* **பரீட்சை முறைமை.**- (அ) பகுதி 1-எழுத்துமூலப் பரீட்சை, இது பின்வரும் ஆறு (6) பாடங்களைக் கொண்டிருக்கும் :

| | பாடங்கள் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (i) | பொது வினாத்தாள் | 3 மணித்தியாலங்கள் | 100 |
| (ii) | உலக விவகாரங்கள் I | 3 மணித்தியாலங்கள் | 100 |
| (iii) | உலக விவகாரங்கள் II | 3 மணித்தியாலங்கள் | 100 |
| (iv) | கட்டுரை | 3 மணித்தியாலங்கள் | 100 |
| (v) | சுருக்கி எழுதுதல் | 1 மணித்தியாலம் | 100 |
| (vi) | இயல்பு திறனும் பொது அறிவும் | 1 மணித்தியாலம் 40 நிமிடம் | 100 |

**எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம்** :

(i) *பொது வினாத்தாள்.*- இவ்வினாத்தாள் இலங்கை அரசியல், சமூக, கலாசார, பொருளாதாரச் சூழல் நடப்பு தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் பற்றிய விடயங்கள் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்திகள் என்பன தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிப்பதாகும்.

(ii) *உலக விவகாரங்கள் I.*- இவ்வினாத்தாள் உலக நோக்கான சமாதானம், பாதுகாப்பும் நாட்டு முன்னேற்றமும் மற்றும் இவை இலங்கைக்கு எப்படியான தாக்கத்தை ஏற்படுத்து கின்றன என்பனவற்றையிட்டு ஆராய்ந்து கிரகிக்கும் தன்மையை பரீட்சார்த்தி கொண்டுள்ளாரா என்பதனை பரீட்சிப்பதன் நோக்கில் உலகில் இன்றைய அரசியல் வளர்ச்சி, ஐக்கிய நாடுகள் சபை, அரசாங்கங்களுக் கிடையேயான தாபனங்கள், முரண்பாட்டு சூழ்நிலைகள் மற்றும் தேசிய, சர்வதேச இயக்கங்களின் வளர்ச்சி என்பனவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும்.

(iii) *உலக விவகாரங்கள் II.*- இவ்வினாத்தாள் அண்மைக் காலத்தில் வர்த்தகம் மற்றும் பொருளாதார முன்னேற்றப் போக்குத்துறையில் சர்வதேச, அரசாங்கங்களுக்கிடையேயான தாபனங்கள் ஆற்றிய பங்களிப்பு, பிராந்திய பொருளாதார கூட்டமைப்புக்கள் ஏற்படுத்தும் தாக்கம், சுற்றாடல் மற்றும் நிலையான அபிவிருத்தியும் இவை இலங்கைக்கு எவ்வகையில் சம்பந்தப்படுகின்றது போன்றவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும்.

(iv) *கட்டுரை.*- குறித்துரைக்கப்பட்ட விடயம் பற்றி அல்லது பல விடயங்கள் பற்றி கட்டுரை எழுத வேண்டும். இவ்விடயங்கள் கற்கைத்துறையின் ஏதேனும் விடயம் தொடர்புபட்டதாக இருக்க மாட்டாது. பரீட்சார்த்தியின் பொது அறிவும் சிந்தனையிலும் கருத்தை வெளிப்படுத்துவதிலும் உள்ள பொது ஆற்றலையும் பரீட்சிப்பதற்கானதாக அது அமையும். கட்டுரை எழுதுவதில் சுயமான கருத்துக்களை அறிமுகப் படுத்தும் திறமை, சுய ஆக்கம், மொழி நடை, அதன் அமைப்பு ஆகியவை மூலம், கட்டுரையின் தன்மை என்பனவும் கணிக்கப்படும். அது தெளிவாகவும் பிழைகள் இன்றியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**- விடயத்திற்கு உகந்த தன்மையும் தெளிவாகவும் இருத்தலின் அவசியம் பரீட்சார்த்திகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது. விடயத்தை பகுத்து ஆராய்ந்து அறிகின்ற சிந்தனை, தரமான எழுத்து மற்றும் தெளிவும் விளக்கமும் உள்ள கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் உண்டு.

(i) *சுருக்கி எழுதுதல்.*- ஒரு கொடுக்கப்பட்ட பந்தியின் கருத்தைப் புரிந்துகொள்ளும் திறமை மற்றும் அதனை திறமையாகவும் சுருக்கமாகவும் வெளிப்படுத்தக்கூடிய திறமையைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாத்தாள் அமைந்திருக்கும்.

(ii) *நுண்ணறிவும் பொது அறிவும்.*- இவ்வினாத்தாள் பின்வரும் பிரிவுகளைக் கொண்ட இரு பாகங்களைக் கொண்டிருக்கும் :-

(அ) *நுண்ணறிவு.*- பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றலையும் பகுத்தறிவுத் திறனையும் மதிப்பீடு செய்வதற்கான வினாத்தாளாகும்.

(ஆ) *பொது அறிவும் நடப்பு விவகாரங்களும்.*- உள்ளூரிலும் சர்வதேச அரங்கிலும் காணப்படும் அரசியல், பொருளாதார, சமூக கலாசாரம் ஆகிய துறைகளிலான நடப்பு அபிவிருத்திகள் பற்றி பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிப்பதற்கான வினாத்தாளாகும்.

*14.* **நேர்முகத் தேர்வு.**- பொது விடயங்கள் சம்பந்தமாகப் பரீட்சார்த்தியுடன் நேர்முக உரையாடல் நடைபெறும். பரீட்சார்த்தி பொறுப்பேற்க உள்ள பதவிக்குப் பொருத்தமானவரா என அவரது தகுதியை எடைபோடுவது இந்நேர்முகப் பரீட்சையின் நோக்கமாகும். விண்ணப்பதாரரின் விவேகம், மனவிழிப்பு ஆளுமையில் அவரது தகைமை மற்றும் ஒழுக்கத்திறன் என்பவற்றை நேரில் அறிந்து கொள்வதில் சபை முனையும். பரீட்சார்த்தியின் பிறநாட்டு மொழி களிலான தகைமை உயர்தர கல்வித்தகைமை மற்றும் கணனி அறிவு என்பனவும் நேர்முகப் பரீட்சையின்போது கவனத்திற்கொள்ளப்படும்.

*15.* **நியமனத்திற்கு தெரிவுசெய்யும் முறை.**- எழுத்துமூலப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளுடன் நேர்முகப் பரீட்சையில்

பெற்ற புள்ளிகளும் கூட்டப்பட்டு பெற்ற முழுப்புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்குவதற்கான இறுதி முடிவு வெளிவிவகார அமைச்சு செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

16. இந்த வர்த்தமானி அறிவித்தலில் வழங்கத் தவறிய விடயங்கள் ஏதும் இருப்பின் அவை வெளிவிவகார அமைச்சு செயலாளரின் தீர்மானத்திற்கமைய செயலாற்றப்படும். வெற்றிடங்களை முழுமையாக அல்லது பகுதியாக அல்லது நிரப்பாமல்விட வெளிவிவகார அமைச்சு செயலாளரிற்கு அதிகாரமுண்டு.

சி. ஆர். ஜயசிங்க,
செயலாளர்,
வெளிவிவகார அமைச்சு.

வெளிவிவகார அமைச்சு,
குடியரசு கட்டிடம்,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010**

Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Foreign Service – 2010

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சை எழுதும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக.)

1. (i) (அ) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உதாரணம் : SUMANASIRI, B. A)

(ஆ) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் (சிங்கள/தமிழ் மொழியில்) :----.

(ii) (அ) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(ஆ) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (சிங்கள/தமிழ் மொழியில்) :----.

2. முகவரி :

(i) பிரத்தியேக (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(அனுமதி அட்டை இவ்விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படும்)
(ii) அலுவலக :----.
(iii) தொலைபேசி இலக்கங்கள் :
அலுவலகம் :----, வதிவிடம் :----.

3. பால்
(ஆண்-0, பெண்-1)
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக.)

4. தேசிய அடையாள அட்டை இல. :----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. (i) பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

6. தேசிய இனம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
இந்தியத் தமிழ் - 3
முஸ்லிம் - 4
ஏனையோர் - 5 ☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக.)

7. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2 ☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக.)

8. இலங்கை வெளிநாட்டுச் சேவை ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கு முன்னர் தோற்றியிருந்தால் பரீட்சைக்குத் தோற்றிய திகதி/திகதிகள் குறிப்பிடுக.

(அ) :----.
(ஆ) :----.
(இ) :----.

9. நீர் ஓர் பட்டதாரியும் அரசாங்க சேவையில் இருப்பவராயும் இருந்தால் சேவையின் பெயர் குறிப்பிடுக :----.

10. பல்கலைக்கழக விபரங்களும் பட்டம் பெற்ற திகதியும் (இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுள்ளீரா என்பதை உறுதிசெய்ய தயவு செய்து இவ்வறிவித்தலின் 6(ஆ) பந்தியைப் பார்க்கவும்.

(i) பல்கலைக்கழகத்தின்/தாபனத்தின் பெயர் :----.
(ii) பட்டப்படிப்பு :----.
(iii) பட்டம் பெற்ற திகதி :----.
(iv) பொது/விசேடம் :----.
(v) பாடங்கள் :----.
(vi) வகுப்பு :----.

11. உங்கள் விண்ணப்பத்திற்காதாரமான வேறு கல்லூரி, பல்கலைக்கழக/உத்தியோகபூர்வ தகைமைகள் (பின் பட்டதாரி/டிப்ளோமா, பிறநாட்டு மொழிகளில் சாகித்தியம் பெற்ற ஆவணங்கள் என்பன) இருப்பின் விபரங்கள் தருக :----.

12. எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று உறுதி செய்வதுடன் நான் பரீட்சைக் கட்டணம் செலுத்திய ........................... ஆம் இலக்க ........................... ஆந் திகதிய பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளேன். நான் இப்பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கமைய நடப்பேனென்றும் இப்பிரமாணங்களுக்கமைய நான் பரீட்சைக்கு முன்போ பரீட்சையின் போதோ அல்லது பின்போ தகைமையற்றவராகக் காணப்படுமிடத்து பரீட்சார்த்தி நிலையிலிருந்து என்னை நீக்குவதற்கு எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டுள்ளேன் எனவும் இணக்கம் தெரிவிக்கின்றேன். அத்துடன் பரீட்சையை

நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமையவும் கட்டுப்பட்டு நடப்பேனெனவும் உறுதி கூறுகின்றேன்.

பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.
(பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்.)

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

(ஏற்கனவே அரசாங்க சேவை/மாகாண சபை/அரச சேவைகளில் உள்ள பரீட்சார்த்திகளுக்கு மட்டும்).

13. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

திரு./ திருமதி/ செல்வி ................................ அவர்கள் ............................ ஆந் திகதிக்கு முன்னுள்ள ஐந்து வருட காலத்தில் (அ) தனது சகல சம்பள உயர்வுகளையும் பெற்றுள்ளார் என்பதையும் (ஆ) எத்தகைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என்பதனையும் பதிவேடுகளிலிருந்து ஊர்ஜிதம் செய்துகொண்டேன்.

விண்ணபத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியெனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டது எனவும் அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அத்தாட்சிப்படுத்து கின்றேன்.

உத்தியோகத்தர் தெரிவாகுமிடத்து அவர் தற்போதைய பதவியிலிருந்து உடனடியாக விடுவிக்க முடியும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவியும்.

திகதி :----.

10-844

---

## இளைஞர் அலுவல்கள் அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

### இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பு (விசேட ஆளணி) விரிவுரையாளர்கள் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2011

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட பின்வரும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளுக்கு இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச்சேவையின் III ஆம் வகுப்பின் (விசேட ஆளணி) விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன:-

(1) தொழில்நுட்பவியல் கல்லூரி மருதானை
(2) தொழில்நுட்பவியல் கல்லூரி காலி
(3) தொழில்நுட்பவியல் கல்லூரி குருநாகல்
(4) தொழில்நுட்பவியல் கல்லூரி கண்டி
(5) தொழில்நுட்பவியல் கல்லூரி பதுளை
(6) தொழில்நுட்பவியல் கல்லூரி அநுராதபுரம்
(7) தொழில்நுட்பவியல் கல்லூரி அம்பாறை
(8) தொழில்நுட்பவியல் கல்லூரி யாழ்ப்பாணம்
(9) தொழில்நுட்பவியல் கல்லூரி இரத்தினபுரி

பதவிகள் விபரம் :

| தொடர் இல. | பதவி | கற்பித்தல் மொழி |
|---|---|---|
| 1 | விரிவுரையாளர் (குடிசார் எந்திரவியல்) | ஆங்கிலம் |
| 2 | விரிவுரையாளர் (மின்னியல் எந்திரவியல்) | ஆங்கிலம் |
| 3 | விரிவுரையாளர் (இலத்திரனியல் எந்திரவியல்) | ஆங்கிலம் |
| 4 | விரிவுரையாளர் (குளிரூட்டல் மற்றும் வளி பதப்படுத்தல்) | ஆங்கிலம் |
| 5 | விரிவுரையாளர் (மோட்டார் வாகன தொழில்நுட்பவியல்) | ஆங்கிலம் |
| 6 | விரிவுரையாளர் (ஆபரண வடிவமைப்புத் தொழில்நுட்பவியல்) | ஆங்கிலம் |
| 7 | விரிவுரையாளர் (உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியல்) | ஆங்கிலம் |
| 8 | விரிவுரையாளர் (பண்ணை இயந்திர தொழில்நுட்பவியல்) | ஆங்கிலம் |
| 9 | விரிவுரையாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்) | ஆங்கிலம் |
| 10 | விரிவுரையாளர் (தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல்) | ஆங்கிலம் |

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் இல. 1 தொடக்கம் 6 வரையானவை 1 ஆம் பக்கத்திலும் இல. 7 தொடக்கம் 12 வரையானவை 2 ஆம் பக்கத்திலும் மிகுதியானவை 3 ஆம் பக்கத்திலும் கட்டாயமாக அமையுமாறு, பரீட்சைக்கு தோற்றவிருக்கும் ஊடக மொழியில் தங்கள் சொந்த கையெழுத்தில் வேண்டிய விபரங்கள் உள்ளடங்கலாக விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமையாமலும் பூரணமற்ற விபரங்கள் அடங்கியதுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் போட்டோ பிரதியை பேணுவது பயனுள்ளதாகும். பரீட்சை அறிவித்தலில் உள்ளபடி மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப, விண்ணப்பங்கள் பூரணத்துவமானவை என விண்ணப்பதாரி களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் தயாரிக்கப்படும்போது, மேலே தலைப்பில் குறிப்பிட்டவாறு பரீட்சையின் பெயரானது, சிங்கள மொழிமூல விண்ணப்பங்கள் தொடர்பில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல விண்ணப்பங்கள் தொடர்பில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் கட்டாயமாக குறிப்பிடப்படல் வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2010, நவெம்பர் 15 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி பயிற்சி திணைக்களம், த. பெ. இல. 557, கொழும்பு 10" எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவை III ஆம் வகுப்பு (விசேட ஆளணி) பதவி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் உமது பதவி தெரிவு ஒழுங்கின்படி ஒவ்வொரு பதவிக்கும் அது தொடர்பான பதவி இலக்கத்தையும் பதவியின் பெயரையும் அவ்விண்ணப்பத்தில் குறிப்பிடல் வேண்டும். வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகுதிகள் இருக்கும் விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

*2.* **சேவை நிபந்தனைகளும் நியமன நியதிகளும்.**- (அ) இப்பதவிகள் நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் விதவைகள் மற்றும் அநாதைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் இளைப்பாற்று நிதியத்திற்கு உதவுத் தொகைகள் செலுத்துமாறு வேண்டப்படுவர். தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி அரச சேவையில் முதல் மூன்று வருடத்திற்கு தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர்.

(ஆ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்ற கடப்பாடுடையவர் ஆவர்.

(இ) **வினைத்திறமைகாண் தடை.**- பொது நிர்வாக சுற்றறிக்கை 20/2001 க்கு அமைய பதவியொன்றுக்கு நியமனம் செய்யப்படும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் தமது சம்பளம் படிநிலையின் 4 ஆவது படிநிலையை பெறமுன்னர் 1 ஆவது வினைத்திறமை காண் தடையினையும் 7 ஆவது படிநிலையைப் பெறமுன்னர் 2 ஆவது வினைத்திறமைகாண் தடையினையும் பூரணப்படுத்த வேண்டும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் வினைத்திறமை காண் தடையைப் பூர்த்தி செய்யாதவர்களது வருடாந்த சம்பள உயர்வு தடுத்து வைக்கப்படுவதுடன் வழங்கப்பட்ட கால வரம்பிற்கு மேலதிகமாக எடுக்கப்பட்ட கால எல்லையெனக் கணிக்கப்படும். இவ் உத்தியோகத்தர்கள் தகுதிகாண் தடையைப் பூர்த்தி செய்யும்வரை தொழில்நுட்பக் கல்விச் சேவையில் எந்த ஒரு உயர்பதவிக்கும் விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவராவார்.

(ஈ) இப்பதவிகளுக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள், நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருடத்திற்குள் இரண்டாம் மொழியில் தேர்ச்சிபெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். இது பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 7/2007 இற்கு ஒருங்கமைவானது. உரிய காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறினால் சம்பள ஏற்றம் பிற்போடுவதற்கேதுவாகலாம். மொழித் தேர்ச்சி பெறவேண்டிய உத்தியோகத்தர்கள், க.பொ.த. (சா.த.) இல் பிரதான பாடமாக (1 ஆம் மொழி வரிசையில்) கொண்ட சிங்களம்/தமிழ் மொழியை இரண்டாவது மொழித் தேர்ச்சிக்காக சித்திபெறல் வேண்டும். (விருப்புத் தேர்வுக்குரிய பாடம் அல்லது 2 ஆவது மொழி, இத்தேர்வில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) அத்துடன் அரச கரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சை அல்லது விசேட திறன் பரீட்சை ஒன்றில் சித்திபெறல் வேண்டும்.

*3.* **வேதனங்களும் கொடுப்பனவுகளும்.**- மேற்படி பதவிக்குரிய மாதாந்த திரட்டிய சம்பள அளவுத் திட்டம்.- ரூபா 22,935 - 10 × 645 - 8 × 790 - 17 × 1,050 -ரூபா 53,555. பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 இன்படி சம்பளம் வழங்கப்படும். சம்பள ஏற்றக் கொடுப்பனவு மேலே 2 (இ) ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு வினைத்திறமைகாண் தடையில் சித்தியடைவதற்கு உட்பட்டதாகும்.

*4.* **தேவையான தகைமைகள்.**- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கீழ்க்காணும் தகைமைகளை விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதை நிரூபிக்கும் சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பம் முடிவடையும் திகதியில் 21 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது ;

(இ) மெச்சத்தகு பண்புகளும் தேகாரோக்கியமும் உடையவராய் இருத்தல் வேண்டும் ;

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் உரிய துறையில் பட்டம் பெற்ற பின்னர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 3 வருட கற்பித்தல்/துறைசார் கள அனுபவம் ;

(உ) குறித்தவொரு துறைசார் பாடத்திற்கான விரிவுரையாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்) தொடர்பில், பட்டப்படிப்பில் குறித்த அத்துறைசார் பாடத்தை கற்றிருத்தல் போதுமானதன்று.

கீழ் குறிப்பிடப்பட்ட ஒன்றோ பல உப துறைகள் கற்பித்தல் அல்லது செயன்முறை அனுபவத்திற்காக உள்ளடங்கியிருக்கும் :

| தொடர் இல. | பதவி | உப துறை |
|---|---|---|
| 1 | விரிவுரையாளர் (குடிசார் எந்திரவியல்) | - கட்டிட நிர்மாண தொழில்நுட்பவியல><br>- நெடுஞ்சாலைத் தொழில்நுட்பவியல்<br>- நீர் வழங்கல் மற்றும் வடிகால் தொழில்நுட்பவியல்<br>- நீர்ப்பாசன தொழில்நுட்பவியல் |
| 2 | விரிவுரையாளர் (மின்னியல் எந்திரவியல்) | - வலு உற்பத்தியாக்கல்<br>- பரிவர்த்தனையும் பகிர்ந்தளிப்பும் |
| 3 | விரிவுரையாளர் (இலத்திரனியல் எந்திரவியல்) | - நுண் கணனி வன்பொருள்<br>- செயலாக்கலும் பிரச்சினை விடுவித்தலும்<br>- குறை கடத்திச் சாதனங்களும் விகிதசமச் சைகைச் சுற்றுக்களும்<br>- இலக்கச் சுட்டி இலத்திரனியல் மற்றும் அதன் பிரயோகங்கள் |
| 4 | விரிவுரையாளர் (குளிரூட்டலும் வளிபதப்படுத்தலும்) | - குளிரூட்டல் தொகுதிகள், வளிப் பதப்படுத்தல் தொகுதிகள்<br>- காற்றோட்ட தொகுதிகள்<br>- குளிரூட்டல், வளிப்பதப்படுத்தல் மற்றும் காற்றோட்ட உபகரண பொருத்தலும் அவற்றின் பராமரிப்பும் |
| 5 | விரிவுரையாளர் (மோட்டர் வாகன தொழில்நுட்பவியல்) | - டீசல் மற்றும் பெற்றோல் இயந்திரம்<br>- மோட்டார் வாகன மின்னிணைப்பு<br>- மோட்டார் வாகன குளிரூட்டல் |
| 6 | விரிவுரையாளர் (ஆபரண வடிவமைப்பு தொழில்நுட்பவியல்) | - ஆபரண உபகரண பராமரிப்பு<br>- ஆபரண வடிவமைப்பு<br>- ஆபரண உற்பத்தி |
| 7 | விரிவுரையாளர் (உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியல்) | - உயிரியல் மருத்துவ உபகரண இயக்குகையும் பராமரிப்பும் |
| 8 | விரிவுரையாளர் (பண்ணை இயந்திர தொழில்நுட்பவியல்) | - பண்ணை இயந்திர பாவனைப் பொருட்கள் பரிசோதிப்பு<br>- பண்ணை இயந்திர உதிரிப்பாக வடிவமைப்பு<br>- பண்ணை இயந்திர உதிரிப்பாக உற்பத்தி<br>- பண்ணை இயந்திர மதிப்பீடும் தெரிவும் |
| 9 | விரிவுரையாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்) | - பல் ஊடக எறிகை வலையமைப்பு, வன்பொருள் மற்றும் மென்பொருள் |
| 10 | விரிவுரையாளர் (தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல்) | - ஆளியிடல், வலையமைப்பு, பரிவர்த்தனை மற்றும் உபகரண பராமரிப்பு |

5. **ஆட்சேர்ப்பு வழிமுறை**.- தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் இலங்கைத் தொழில் நுட்ப கல்வி சேவையின் விரிவுரையாளர் வகுப்பு III க்குரிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் மூலம் விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவைப் பிரமாணக் குறிப்புரைக்கு அமைவாக நியமனம் வழங்குனர் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இப்பரீட்சை நடாத்தப்படும்.

6. உம்மால் உறுதிசெய்யப்பட்ட கீழ்வரும் ஆவணங்களின் பிரதிகள் இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும் :-

(i) பதிவுசெய்யப்பட்ட பிறப்பு சான்றிதழ் (சமய தீட்சை சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்படும் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ii) விபரச் சான்றிதழ் அடங்கலான பட்டதாரிச் சான்றிதழ் அல்லது ஏனைய கல்விச் சான்றிதழ்கள் ;

(iii) தொழில் வல்லுநர் சான்றிதழ் அத்துடன்/ அல்லது அனுபவத்தை உறுதிப்படுத்தும் தொழில்நுட்ப தகைமைகள் ;

(iv) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சித்தியடைந்த உரிய பரீட்சை சான்றிதழ்.

7. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் உரிய விண்ணப் பங்களை தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் பிரசுரமாகும் அரசாங்க சேவை பதவிகளுக்கு மேற்கொள்ளும் நியமனங்கள் தொடர்பாக பொருத்தமுடைய பொது நிபந்தனைகளுக்கும் மற்றும் 1986.08.15 ஆந் திகதிய 415 ஆம் இலக்க பகுதி I இல் வர்த்தமானியின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்கும், உமது கவனம் ஈர்க்கப்படுகிறது.

9. சகல விண்ணப்பதாரிகளும் கீழ்வரும் பகுதிகளை கொண்ட பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படுகின்ற திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பரீட்சைகள் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலம் மாற்றப்பட அனுமதிக்கப்படமாட்டாது.

(i) பொது அறிவு (பரீட்சை காலம் : 01 மணித்தியாலம்) - புள்ளிகள் 100

(ii) பொது உளசார்பு (பரீட்சை காலம் : 01 மணித்தியாலம்) - புள்ளிகள் 100

திறந்த போட்டிப் பரீட்சையில் திறமை ஒழுங்கில் தகுதி பெற்ற பரீட்சார்த்திகள் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகுதிகளை உறுதிசெய்வதற்கு நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். (நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது).

முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு தேவையான மொத்தப் புள்ளிகளைப் பெற்றிருப்பதுடன் ஒவ்வொரு பாட பரீட்சையிலும் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும். ஒவ்வொரு பாடத்துறைகளிலும் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

10. **பாடத்திட்டம்** :

10.1 பொது அறிவு (1 மணித்தியாலம்).-தேசிய, சர்வதேச மட்டத்தில் காணப்படும் பொருளியல், சமூக, அரசியல் மற்றும் புவியியல் தொடர்பான அறிவினை பரீட்சார்த்திகளிடம் மதிப்பிடும் வகையில் இவ் வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இவ்வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும்.

10.2 பொது உளச்சார்பு (1 மணித்தியாலம்).- இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்திகளின் தர்க்க ரீதியான சிந்தனை, அவர்களின் தீர்மானம் எடுக்கும் திறன், நுண்ணறிவு என்பவற்றை மதிப்பீடு செய்யும் வகையில் பல் தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும்.

11. **பரீட்சைத் திகதி**.- 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் கொழும்பில் இப்பரீட்சை நடைபெறும். இப்பரீட்சையை பிற்போடுவதற்கும் இரத்துச்செய்வதற்கும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் செயலாள ருக்கும் உரிமை உண்டு.

பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கிய பிற்பாடு, உடனடியாக பரீட்சைகள் திணைக்களத்தினால் அதுபற்றிய ஒரு பத்திரிகை குறிப்பு வெளியிடப்படும். இவ்வெளியீட்டின் பின்னரான 2 அல்லது 3 நாட்களில் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் அவ்வெளியீட்டில் குறித்துரைக்கப்பட்டபடி பரீட்சைகள் திணைக்களத்திற்கு குறிப்பிடல் வேண்டும். பரீட்சார்த்திகளினால் பேணப்படும் விண்ணப்பத்தின் சான்றுப்படுத்திய ஒரு போட்டோ பிரதி, தபாலில் பதிவுசெய்த இரசீது மற்றும் கொழும்புக்கு வெளியே அனுமதி அட்டையை அனுப்பவேண்டி ஏற்படின் அதற்கு ஏதுவான தொலைநகல் இலக்கம் அடங்கலாக வேண்டுகோள் கடிதமொன்றை சமர்ப்பித்தல் மிகவும் அனுகூலமானது.

12. **பரீட்சைக் கட்டணம்**.- மீளளிக்கப்படாத பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஐ விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னராக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் "பணிப்பாளர் நாயகம், தொழில் நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் என்ற பெயரிலான 176-1001-39026228 என்னும் (மிட் சிற்றி கிளை)" கணக்கு இலக்கத்தில் வைப்பிலிட்டு, பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட பகுதியில் ஒட்டவும். பற்றுச்சீட்டின் பிரதியை பரீட்சார்த்திகள் வைத்திருப்பது உபயோகமானது.

13. வெற்றிடங்களின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ நிரப்பாமல் விடும் உரிமை இளைஞர் அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கே உரித்துடையதாகும்.

14. இப்பதவிகளுக்கு தாபன விதிக்கோவைப் பிரமாணத்தின் II ஆவது அத்தியாயத்தின் 10-12 ஆம் பிரிவுகளில் குறிப்பிட்ட நியதிகள் ஏற்புடைத்தாகும்.

15. பரீட்சையின் முதல் நாளன்று, கையொப்பத்தினை சான்றுப் படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

16. பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சையின் நிமித்தம், பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை சான்றுப்படுத்தவேண்டி

ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது வலிதான கடவுச்சீட்டு மட்டுமே பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

17. பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்குவதைக் கொண்டு அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

18. பரீட்சை ஆணையாளரினால் சட்டவாக்கம் பெற்ற பரீட்சைகள் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குப் பிரமாணங்களுக்கு பரீட்சார்த்தி கடப்பாடுடையவராவார். மீறப்படுமாயின் பரீட்சை ஆணையாளரினால் சட்டவாக்கம்பெற்ற தண்டனைக்கு பரீட்சார்த்தி ஆளாவார்.

எஸ். எஸ். ஹேவாபத்திரன,
செயலாளர்,
இளைஞர் அலுவல்கள் அமைச்சு.

இளைஞர் அலுவல்கள் அமைச்சு,
"நிபுனதா பியச",
இல. 354/2, எல்விற்றிகல மாவத்தை,
கொழும்பு 05.
2010.10.05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இளைஞர் அலுவல்கள் அமைச்சு**

*தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின்கீழ் இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பின் (விசேட ஆளணி) விரிவுரையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2011*

| | பதவி | பதவி இல. |
|---|---|---|
| I தெரிவு<br>II தெரிவு<br>III தெரிவு | | |

வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 1 ஐப் பார்க்கவும். தெரிவினை பின்னர் மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது.

1.0 மொழி மூலம் : பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில அச்செழுத்துக்களில்)
உ-ம் : சில்வா ஏ. பி.

2. முழுப் பெயர் :-

3. (அ) அலுவலக முகவரி :-

(ஆ) சொந்த முகவரி (ஆங்கில அச்செழுத்துக்களில்) :-
(அனுமதி அட்டை கிடைக்க வேண்டிய முகவரி)

(இ) தனிப்பட்ட தொலைபேசி இல :----.

4. (அ) இலங்கைப் பிரஜையா? :-

ஆம் ☐ இல்லை ☐

5. (அ) பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ஆ) தேசிய அடையாள அட்டை இல. :-

6. விண்ணப்பம் முடிவடையும் திகதியில் வயது :-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள்: ☐☐

7. தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரங்கள் :-

(அ) பதவியும் நியமனத் திகதியும் :-----.
(ஆ) பதவி நிரந்தரமானதா ? தற்காலிகமானதா? :-----.
(இ) ஓய்வூதிய உரித்துடையதா ? ஓய்வூதிய உரித்தற்றதா? :---.
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? :-----.
(உ) திணைக்களம் :-----.
(ஊ) நிறுவனம் /பணிபுரியும் இடம் :-----.

8. கல்வித் தகைமைகள் தொடர்பான விபரங்கள் (சிங்களம்/ தமிழ் மொழியில் தேர்ச்சி தொடர்பான சான்றிதழ் உட்பட)

| பரீட்சை | பல்கலைக்கழகம்/ நிறுவனம் | வருடம் | பாடத்துறை |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | | |

9. கற்பித்தல்/துறைசார் கள அனுபவம் தொடர்பான விபரங்கள் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | பெறப்பட்ட சான்றிதழ் | காலம் | பாடத்துறை/ தொழில்சார் துறை |
|---|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | | | |

(தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)

10. முன்னைய நியமனங்கள் (சரியான திகதிகளுடன் காலவரன் ஒழுங்கில் குறிப்பிடவும்) :-

| திணைக் களம்/ நிறுவனம் | வேலை செய்த இடம் | பதவி | பதவி நிரந்தர மானதா அல்லது தற்காலிக மானதா? | இருந்து | வரை | காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |

11. உமக்கு எதிராக சட்ட நீதிமன்றத்தில் யாதேனும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :----.

12. அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் அல்லது சபை/ கூட்டுத்தாபனம் ஒன்றில் இதற்கு முன் சேவையாற்றி இருப்பின் அச்சேவை முடிவுறுத்தப்பட்டதற்கான காரணம் :-----.

13. உமக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று விசாரணைகள் நிலுவையிலுள்ளதா ? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----.

(பரீட்சைக் கட்டண பற்றுச்சீட்டு ஒட்டப்பட வேண்டிய இடம்)

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதி கூறுகின்றேன். தெரிவின் முன்னராக இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என நியமனத்தின் பின்பு கண்டுபிடிக்கப்பட்டால் எந்தவித நட்டஈடுமின்றி தகைமையற்றவராக கருதி பதவியிலிருந்து விலக்கப்படுவதற்குப் பாத்திரமாவேன் எனவும் நான் நன்கு அறிவேன். மேலும் பரீட்சை தொடர்பான பரீட்சைகள் ஆணையாளரினால் சட்டவாக்கம் பெற்ற விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு நான் கடப்பாடுடையவர் என வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

***அரச மற்றும் மாகாண அரச சேவை விண்ணப்பதாரிகளுக்கானது.***

***திணைக்களத் தலைவரின் சிபாரிசு.-***

மேற்படி அலுவலரின் இல. 10 தொடக்கம் 13 வரையான தகவல்கள் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் சான்றுப்படுத்து கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

10-882

## தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது

**"வடமேல் மாகாண இளைஞர், யுவதிகளுக்கு தேசிய மற்றும் சர்வதேச மொழிகளை கற்பதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்....."**

உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொண்டு, நவீன உலகிற்கு பிரவேசிக்கும் பொருட்டு மொழிக்கல்வி பயிற்சி நெறிகள் பலவற்றை தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஒழுங்கமைத்துள்ளது.

அடிப்படை பேச்சு மற்றும் எழுத்தாற்றலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் பாடநெறிகளை பயிலுவதற்காக வடமேல் மாகாண இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

| பாடநெறி | காலம் |
|---|---|
| தமிழ் மொழி | 4 மாதங்கள் |
| ஆங்கில மொழி | 4 மாதங்கள் |
| கோரியன் மொழி | 4 மாதங்கள் |
| இத்தாலி மொழி | 4 மாதங்கள் |
| ஜேர்மன் மொழி | 4 மாதங்கள் |
| பிரஞ்சு மொழி | 4 மாதங்கள் |
| ஜப்பான் மொழி | 4 மாதங்கள் |

மேல்வரும் பாடநெறியை பயிலுவதற்கு ஆர்வமுடைய இளைஞர், யுவதிகள் தாம் விரும்பும் பாடநெறியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு, கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2010.10.30 ஆந் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இலக்கம் 40, புத்கமுவ வீதி, ராஜகிரிய" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். பாடநெறியானது வாரநாட்கள் மற்றும் வார இறுதி நாட்களில் நடைபெறும். (பாடநெறிக்கான கட்டணம் ரூபா 8,000 இல் இருந்து - 10,000 வரை).

மாதிரி விண்ணப்பப்படிவம்

பயில விரும்பும் பாடநெறி :----.

1. பெயர் :----.
2. தனிப்பட்ட முகவரி :----.
3. பிறந்த திகதி :----.
4. தொலைபேசி இலக்கம் (இல்லம்) :----; கையடக்கத் தொலைபேசி இலக்கம் :----.
5. கல்வித் தகைமைகள் :----.
6. ஏனைய தகைமைகள் :----.

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சட்டதிட்டங் களின்கீழ் பாடநெறியை பின்பற்றுவதற்கு உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10-745

**தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு**

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
(2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டத்தின்கீழ்
நிறுவப்பட்டது)

**மொழிபெயர்ப்புக் கற்கைகள் பற்றிய டிப்ளோமா பாடநெறி**

**"மகத்துவமான வாழ்க்கைத் தொழிலாக மொழிபெயர்ப்பு, உரைபெயர்ப்புத் துறைகளைத் தெரிவுசெய்து கொள்வதற்கான ஒரு மாபெரும் வாய்ப்பு ....."**

அரசாங்கத்தின் முதன்மைத் தேவைகளில் ஒன்றான மொழிபெயர்ப் பாளர்களின் பற்றாக்குறைக்கு தீர்வு வழங்குவதன் மூலம், சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு மொழித்துறையில் ஊக்கம் செலுத்தும் இளைஞர் யுவதிகளுக்காக மொழிபெயர்ப்புக் கற்கைகள் பற்றிய ஒரு வருட டிப்ளோமா பாடநெறியொன்றை ஒழுங்குசெய்துள்ளது.

வயது 25 இற்குக் குறைவான சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய ஏதேனும் ஒரு மொழியுடன் க. பொ. த. (உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்த க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில பாடங்களில் திறமைச் சித்தி அல்லது இலக்கிய பாடத்தில் திறமைச் சித்திபெற்ற இளைஞர், யுவதிகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

மொழித்திறன் பற்றிய பொது உளச்சார்பு பரீட்சையொன்றின் பின்னர் தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு நான்கு (4) மாதங்கள் அகலவத்தையில் அமைந்துள்ள தேசிய மொழிக்கல்வி, பயிற்சி நிறுவனத்தில் மொழிபெயர்ப்பு வழிமுறைகளும் கோட்பாடுகளும் பற்றி முழுநேர பயிற்சி வழங்கப்படும்.

இரண்டு மாத காலம் பயிலுநர்களுக்காக கருத்திட்ட அடிப்படை யிலான செயற்பாடுகளும், ஆறுமாத காலம் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் பற்றிய செயன்முறைப் பயிற்சியும் வழங்கப்படும். இந்த ஒரு வருட கால பாடநெறியை நிறைவுசெய்கின்ற பயிலுநர்களுக்கு டிப்ளோமா தராதரப்பத்திரம் வழங்கப்படுவதுடன் அரசாங்க அல்லது தனியார் துறையில் மொழிபெயர்ப்பாளராக பணிபுரியக்கூடிய இயலுமையும் உருவாகும். இதற்கு மேலதிகமாக மொழிபெயர்ப்புத் துறையில் ஈடுபடுவதற்காக தொழில்சார் உரிமமொன்றும் வழங்கப்படும்.

பாடநெறிக் கட்டணம் ரூபா 50,000 ஆகும். ஆயினும் அதில் 20% வீதம் மாத்திரமே விண்ணப்பதாரிகளிடமிருந்து அறவிடப்படுவதுடன் எஞ்சிய தொகை இந்நிறுவனத்தினால் ஈடுசெய்யப்படும்.

நான்கு மாதகாலம் முழுநேர விரிவுரைகளுக்காக கலந்துகொள்ளும் போது வதிவிட வசதிகள் நிறுவனத்தினால் இலவசமாக வழங்கப் படுவதுடன், உணவுக்கான செலவை மாத்திரமே பயிலுநர்கள் செலுத்த வேண்டும்.

கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2010.10.30 ஆந் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், தேசிய மொழிக் கல்வி பயிற்சி நிறுவனம், முதலாம் மாடி, தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, இல. 40, புத்கமுவ வீதி, இராஜகிரிய" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். (விபரங்களுக்கு.- 011-2883724, 034-3942683).

மாதிரி விண்ணப்பப்படிவம்

1. பெயர் :----.
2. தனிப்பட்ட முகவரி :----.
3. பிறந்த திகதி :----.
4. தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :----;
   கையடக்கத் தொலைபேசி இலக்கம் :----.
5. பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி மூலம் :----.
6. கல்வித் தகைமைகள் (க. பொ. த. உயர்தரம்/க. பொ. த. சாதாரண தரம்) :----.
7. வேறு தகைமைகள் :----.

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

இந்த பாடநெறிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அதன் நிபந்தனைகளுக்கு அமைய பயிற்சிபெற நான் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10-746